பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 08 திங்கட்கிழமை 26.09.2022 கதிர் 212

## சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கையைப் பாரப்படுத்துங்கள்

### இணை அனுசரணை நாடுகளிடம் கஜேந்திரன் எம்.பி. வலியுறுத்தல்

இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படும் தீர்மானம், பாதிக்கப்பட்ட மக்களது நன்மைக்காக நிறைவேற்றுவதாக இருந்தால் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், போர்க் குற்றங்கள், இனப்படுகொலைக் ☞2

# தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல்; தமிழர் தாயகம் எங்கும் உணர்வெழுச்சி!

### பிரதான நிகழ்வு நல்லூரில்; பெருமளவிலானோர் பங்கேற்பு














(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

தமிழினத்தின் விடிவுக்காக ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து பன்னிரு நாள்கள் நீராகாரமின்றி உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாக தீபம் திலீபனின் 35ஆம் ஆண்டு நினைவேந்தலின் இறுதி நாள் நிகழ்வு இன்று தமிழர் தாயகத்தில் ☞2

## அமெரிக்காவின் நிரந்தரப் பிரதிநிதி ஜனாதிபதி ரணிலுடன் நேரில் பேச்சு



ரோமிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய முகவரமைப்புக்களுக்கான அமெரிக்காவின் நிரந்தரப் பிரதிநிதி சின்டி மெக்கெய்ன், ஜனாதிபதி ரணில் விக்கிரசிங்கவை ☞2

## நல்லூரில் திலீபனின் நினைவேந்தலில் குழப்பம் விளைவித்த முன்னணியினர்!

### தட்டிவீழ்த்தப்பட்டது பொதுச்சுடர்; ஒருவர் காயம்

(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

தியாக தீபம் திலீபனின் 35ஆவது ஆண்டின் இறுதி நாள் நிகழ்வு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரின் நாட்டாமைத்தனத்தால் பெரும் குடுமிப்பிடி சண்டையில் நடந்து முடிந்தது.

தியாக தீபம் திலீபனின் இறுதி நாள் நினைவேந்தல் நிகழ்வு இன்று நல்லூரில் உள்ள திலீபனின் நினைவேந்தல் தூபியில் நடைபெற்றது.

நினைவேந்தல் ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே நினைவிடத்தைச் சுற்றி வளைத்து மஞ்சள் ரீசேர்ட் அணிந்த தமிழ்த் தேசிய மக்கள் ☞2



## வடக்கிலுள்ள படையினருக்கு அரச காணிகள் தாரைவார்ப்பு

### மாகாண சபை இயங்காத சந்தர்ப்பத்தில்

வடக்கு மாகாண சபையின் ஆயுள் காலம் முடிவடைந்த பின்னர் பாதுகாப்புத் தரப்பினருக்கு 40 ஏக்கர் அரச காணிகள் இதுவரை உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டுள்ளன.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக கேட்கப்பட்ட கேள்விக்கு, வடக்கு ☞2

## 742 சிறுவர் துஷ்பிரயோகங்கள் வடக்கில் 5 ஆண்டுகளில் பதிவு

வடக்கு மாகாணத்தில் கடந்த 5 ஆண்டுகளில் 742 சிறுவர்கள் பாலியல் ரீதியாகவும், உடலியல் ரீதியாகவும் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் இளவயது கர்ப்பம் காரணமாக 49 சிறுமிகள் பாதுகாப்பு இல்லத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

-இவ்வாறு சிறுவர் ☞2



## யாழ். பல்கலையில் தியாகிக்கு அஞ்சலி

(இ.கலையமுதன்)

தியாக தீபம் திலீபனின் 35ஆவது நினைவு தினம், இன்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

திலிபன் உயிர்நீத்த 10.48 மணிக்கு நினைவேந்தல் பொதுச்சுடர் ஏற்றலுடன் ஆரம்பமானது.

அதைத் தொடர்ந்து, ☞2

## மட்டக்களப்பு காந்தி பூங்காவில் தியாக தீபத்தின் நினைவேந்தல்



தியாக தீபம் திலீபனின் 35ஆம்ஆண்டுநினைவேந்தல் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் இன்று எழுச்சிபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ்த்தேசியமக்கள் முன் னணியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் உணர்வாளர்கள் பலர் கலந்துகொண்டனர்.

தியாக தீபம் திலீ பன் உயிர்நீத்த நேரமான காலை 10.48 மணிக்கு அவ ரின் திருவுருவப் படத்துக்கு மாவீரர் ஒருவரின் ☞2

## சர்வதேச.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றங்கள் தொடர்பான பொறுப்புக்கூறல் விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு (ஐ.சி.சி.) பாரப்படுத்தும் தீர்மானத்தை மேற்கொள்ளுங்கள்.

இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், இணை அனுசரணை நாடுகளிடம் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை தொடர்பான தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கும் நாடுகளால், தீர்மானம் தொடர்பில் நாடுகளது கருத்துக்களை அறிந்து தீர்மானத்தில் திருத்தங்களை மேற்கொள்ளும் கலந்துரையாடல் கடந்த 22ஆம் திகதி பிரிட்டன் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில், தமிழ் உலகம் அமைப்பின் ஊடாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அமர்வில் கலந்துகொள்வதற்கான அனுமதியைப் பெற்றுச் சென்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் இடம்பெற்ற மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள், இனப்படுகொலைக் குற்றங்கள் தொடர்பில் போர் முடிந்து 13 வருடங்கள் ஆகியும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

கடந்த பத்து வருடங்களாக மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களால் மேற்படி பொறுப்புக்கூறலில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. இனியும் எந்த முன்னேற்றமும் ஏற்படப்போவதில்லை.

இவ்விடயங்களை சுட்டிக்காட்டி எமது கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் நானும் கையொப்பமிட்டு கடந்த 6 ஆம் திகதி கடிதத்தை இணை அனுசரணை வழங்கும் நாடுகளாகிய உங்களுக்கு அனுப்பி இருந்தோம்.

எனவே, இந்தத் தீர்மானம் பாதிக்கப்பட்ட மக்களது நன்மைக்காக நிறைவேற்றுவதாக இருந்தால் பொறுப்புக்கூறல் விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்தும் தீர்மானத்தைமேற்கொள்ளநடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் - என்றார்.

## 742 சிறுவர்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நன்னடத்தை திணைக்களத்தின் தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் யாழ்ப்பாணம் மாவட்டத்திலேயே அதிகளவான துஷ்பிரயோக சம்பவங்கள் ஒவ்வொரு ஆண்டும் பதிவாகியுள்ளன.

2018ஆம் ஆண்டு பாலியல் ரீதியாக 105பேரும், உடலியல் ரீதியாக 91 பேரும் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

2019ஆம் ஆண்டு106 பேர் பாலியல் ரீதியாகவும், 65 பேர் உடலியல் ரீதியாகவும் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

2020ஆம் ஆண்டு பாலியல் ரீதியாக 118 பேரும், உடலியல் ரீதியாக 52 பேரும் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு பாலியல் ரீதியாக 123 பேரும், உடலியல் ரீதியாக 15 பேரும் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இந்த ஆண்டு கடந்த ஜூன் மாதம் வரையில் பாலியல் ரீதியாக 59 பேரும், உடலியல் ரீதியாக 8 பேரும் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

## வடக்கிலுள்ள..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண காணி திணைக்களம் வழங்கிய பதிலிருந்தே இந்த விடயங்கள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன.

வடக்கு மாகாணத்தில் 22 ஆயிரம் குடும்பங்கள் காணிகள் இல்லாமல் இருக்கும் சூழலில், இந்தக் காணிகள் 2019, 2020, 2021, 2022ஆம் ஆண்டுகளில் கையளிக்கப்பட்டுள்ளன.

கடற்படையினருக்கு 22.15 ஏக்கரும், பொலிஸாருக்கு 9.5 ஏக்கரும், இராணுவத்தினருக்கு 6.25 ஏக்கரும், விமானப் படைக்கு 1.24 ஏக்கரும் வழங்கப்பட்டுள்ளன.

பொலிஸாருக்கு 2019 ஆம் ஆண்டு அரச காணிகள் வழங்கப்பட்டுள்ளன. ஒட்டுசுட்டானில் 0.4 ஏக்கரும், புதுக்குடியிருப்பில் 4.9 ஏக்கரும், கொக்கிளாயில் 1 ஏக்கரும், பளையில் 2 ஏக்கரும், நயினாதீவில் 0.25 ஏக்கரும், வவுனியா தெற்கில் 1 ஏக்கரும் வழங்கப்பட்டுள்ளன.

2020ஆம் ஆண்டு கடற்படையினருக்கு சங்கானை பிரதேச செயலர் பிரிவில் அராலியில் 0.37 ஏக்கரும், யாழ்ப்பாணத்தில் 0.06 ஏக்கரும், ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனையில் 0.3 ஏக்கரும், கொக்குத்தொடுவாயில் 3.39 ஏக்கரும், கொக்கிளாய் கிழக்கில் 1.49 ஏக்கரும், பூநகரியில் 7.38 ஏக்கரும், மண்டைதீவு தெற்கில் 0.62 ஏக்கரும், அல்லைப்பிட்டியில் 0.25 ஏக்கரும், வேலணை கிழக்கில் 0.25 ஏக்கரும், ஊர்காவற்றுறை சுருவிலில் 0.19 ஏக்கரும் வழங்கப்பட்டுள்ளன.

விமானப்படையினருக்கு கேப்பாபிலவில் 1.24 ஏக்கர் வழங்கப்பட்டுள்ளது. இராணுவத்தினருக்கு கரைதுறைப்பற்றில் 1.83 ஏக்கர் கையளிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு இராணுவத்தினருக்கு முசலியில் 4.42 ஏக்கரும், கடற்படையினருக்கு வேலணையில் 0.31 ஏக்கரும், நெடுந்தீவில் 1.5 ஏக்கரும் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு கடற்படையினருக்கு பூநகரி பொன்னாவெளியில் 5 ஏக்கரும், வலைப்பாட்டில் 0.25 ஏக்கரும், முசலியில் 0.21 ஏக்கரும், காரைநகரில் 0.04 ஏக்கரும் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்த அரச காணிகளுக்குரிய கோரிக்கைகளில் சில, பாதுகாப்புத் தரப்பினரால் வடக்கு மாகாண சபை இயங்கிய காலத்தில் முன்வைக்கப்பட்டபோது அப்போதைய காணி அமைச்சராக இருந்த முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனால் நிராகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவின்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றிரவு ஜனாதிபதி மாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு நேற்று வருகை தந்த அவர், நாளைமறுதினம் வரையில் நாட்டில் தங்கியிருந்து, இலங்கையில் அமெரிக்கா மேற்கொள்ளும் உணவு உதவி திட்டங்கள் தொடர்பில் மேற்பார்வை செய்யவுள்ளார்.

அத்தோடு இலங்கையின் நலன்கள் தொடர்பில் அமெரிக்கா கொண்டுள்ள உறுதிப்பாடுமற்றும்இலங்கையுடனான நீடித்த பங்காண்மை ஆகியவற்றை மீளவலியுறுத்துவதற்கான நடவடிக்கைகளிலும் சின்டி மெக்கெய்ன் ஈடுபடுவதோடு, நாட்டில் தங்கியிருக்கும் நாட்களில் கொழும்பில் முக்கியமான அரச தலைவர்களையும் சந்திக்கவுள்ளார்.

இந்தச் சந்திப்புக்களுக்கு மேலதிகமாக அமெரிக்க தூதுவர் ஜூலி சங்குடன் இணைந்து மத்திய மாகாணத்திலுள்ள பாடசாலைகள், விவசாய ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் சமூக அமைப்புக்களுக்கு பயணம் செய்து அமெரிக்க அரசால் நிதியளிக்கப்பட்ட மனிதாபிமான உதவித்திட்டங்கள் ஊடாக நிவாரணம் பெற்றவர்கள் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துபவர்களுடனும் சந்திப்புக்களை மேற்கொள்ளவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பு..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாயார் ஈகைச்சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தினார்.

இதனைத் தொடர்ந்து நினைவேந்தலில் கலந்துகொண்டவர்கள் அன்னாரின் திருவுருவப் படத்துக்கு மலர்மாலை அணிவித்து பூ தூவி இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர்.

## தியாகதீபம்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது. தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கில் இம்முறை மக்கள் கூடுதல் அக்கறை காட்டி தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வை எழுச்சிபூர்வமாக நடத்தினர்.

பிரதான நிகழ்வு யாழ்ப்பாணம், நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் திலீபன் உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த நேரமான காலை 10.48 மணியளவில் ஆரம்பமானது.

பல பாகங்களில் இருந்தும் ஊர்திகளின் பவனி காலை 10 மணி முதல் நல்லூரில் உள்ள தியாக தீபம் திலீபனுடைய நினைவாலயத்தை வந்தடைந்த வண்ணம் இருந்தன.

அதேவேளை, கைதடி பகுதியில் இருந்து இரண்டு இளைஞர்கள் தூக்குக் காவடி எடுத்து தியாக தீபத்துக்கு அஞ்சலி செலுத்தினர்.

நல்லூர் நிகழ்வில் மதகுருமார்கள், முன்னாள் போராளிகள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், அரசியல் கைதிகளின் உறவுகள், கல்விச் சமூகத்தினர் மற்றும் பொதுமக்கள் எனப் பெருமளவிலானோர் அணிதிரண்டு தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படத்துக்கு அஞ்சலி செலுத்தினர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புதிதாகத் திட்டமிடப்படும் சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும், சிறைகளிலும், தடுப்பு முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும், அவசரகாலச் சட்டம் முழுமையை நீக்கப்பட வேண்டும், ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்பட வேண்டும், தமிழர் பிரதேசங்களில் புதிதாகப் பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும் ஆகிய 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, தியாக தீபம் திலீபன் 1987ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதி தொடக்கம் 26ஆம் திகதி வரையான 12 நாட்கள் அகிம்சை வழியில் யாழ். நல்லூரில் நீராகாரம் அருந்தாமல் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி உயிர்நீத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ்.பல்கலை..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திலீபனின் திருவுருவப்படத்துக்குப் பல்கலைக்கழக சமூகத்தினரால் மலர் மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது பல்கலைக்கழக மாணவர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## நல்லூரில்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னணியினர் நினைவேந்தலைச் செய்வதற்குத் தயாராகி நின்றனர். தியாக தீபம் திலீபன் உயிர்நீத்த 10.48 மணிக்குப் பொதுச்சுடர் ஏற்றுவதற்குத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் முயற்சித்த நிலையில், நல்லூரில் உள்ள நினைவிடத்தில் தியாக தீபம் திலீபனுக்காக இரண்டு இளைஞர்கள் பறவைக் காவடி எடுத்து வந்ததுடன், அவர்களை விடுமாறு முன்னாள் போராளிகள் சிலர் கோரிக்கை விடுத்தனர்.

முன்னாள் போராளிகளுடன் ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர், நாங்களே பொதுச்சுடர் ஏற்றுவோம் என்று மல்லுக்கட்டிப் பொதுச்சுடரை ஏற்றினர்.

அதன் பிறகாவது பறவைக் காவடி எடுத்தவரை நினைவிடத்துக்குள் அனுமதிக்குமாறு முன்னாள் போராளிகளால் கோரப்பட்டபோதும் அதற்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் மறுப்புத் தெரிவிக்கவே அங்கு தள்ளுமுள்ளு ஏற்பட்டதுடன் பொதுச்சுடரும் தட்டிவீழ்த்தப்பட்டது.

பெரும் இழுபறிக்கு மத்தியில் பறவைக் காவடி எடுத்து வந்த இளைஞர்கள் காவடியை இறக்கி தியாக தீபம் திலீபனுக்கு மலர் தூவி அஞ்சலித்ததுடன் நினைவேந்தல் பெரும் குழப்பத்துக்கு மத்தியில் நடந்து முடிந்தது.

தியாக தீபம் திலீபனுக்குப் பலரும் நினைவேந்தல் செய்வதற்கு முற்பட்டபோதும் அங்கிருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் அவர்கள் மீது வசை பாடியதையும் அவதானிக்க முடிந்தது.

இவ்வளவு குழப்பங்கள் இடம்பெற்றுக் கொண்டிருந்த போதும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைகட்டி நடப்பவற்றை வேடிக்கை பார்த்ததை அவதானிக்க முடிந்தது.

இந்த ஆண்டு தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலுக்கு இலங்கை அரசு எந்தவிதத்திலும் இடையூறு ஏற்படுத்தாத போதும், தமிழ் கட்சிகளும் தமிழ்த் தரப்புகளுமே நினைவேந்தலுக்கு இடையூறு ஏற்படுத்தியமை அங்கிருப்பவர்கள் மத்தியில் பலத்த விமர்சனத்தை உருவாக்கியது.

நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலில் இன்று ஏற்பட்ட குழப்பத்தை அடுத்து பொதுச்சுடர் தட்டிவீழ்த்தப்பட்டதுடன், அந்த விபத்தில் அங்கு நின்ற ஒருவர் காயமடைந்தார்.

இதையடுத்து நோயாளர் காவு வண்டி வரவழைக்கப்பட்டு குறித்த நபர் யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.



# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கீழ்மைத் தலைவர்கள்

**அரசியல் தந்திரசாலி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஒரு பெயர் உண்டு. எதிர்ப்பக்கத்தில் இருக்கும் அரசியல் கட்சிகளை – தரப்புகளை – தமது குள்ளநரித்தனம் மூலம் பிரிப்பதில் அவர் பலே கெட்டிகாரர் என்பார்கள்.**

**அது உண்மையோ அல்லது நினையாப் பிரகாரமாக பொருந்தி வந்துவிட்ட பெயரோ தெரியவில்லை.**

**விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து கருணாவைப் பிரித்தவர் அவர் என்ற குற்றச்சாட்டும் கூட இருந்தது – விவகாரம் அவர் புலிகளுடன் சமாதான முயற்சியை முன்னெடுத்த காலத்தை ஒட்டி இடம்பெற்றமையால்.**

**அதுபோல, இப்போதும், குருவி இருக்கப் பனம்பலம் விழுந்த கதையாக – செல்லும் செல்லாதவை எல்லாம் செட்டியார் தலை மீது சுமத்துவது போல – தமிழர் தேசத்தில் நடக்கும் குளறுபடிகள் சிலவற்றுக்கும் தற்சமயம் ரணிலின் தலையை உருட்டினாலும் உருட்டுவார்கள்.**

**கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரத்தில் இருந்த போது இங்கு நினைவேந்தல்கள், நினைவு நிகழ்ச்சிகள் நடத்த இருந்த இக்கட்டு, கெடுபிடி தெரிந்ததுதான். அதனால் நம் அரசியல்வாதிகள் பம்மிக் கொண்டிருந்தனர். ஏதோ தலைக் கறுப்பைக் காட்டி, எதிர்ப்புத் தெரிவிப்பது என்றாலும், அப்போது தனித்து நடத்தப் பயம். அதனால் நினைவேந்தல்கள், அஞ்சலிகள், விளக்கேற்றும் நடவடிக்கைகளுக்கு எதிரான கெடுபிடிகள், கட்டுப்பாடுகளை ஆட்சேபிப்பதில் கூட நம் மத்தியில் ஓர் ஒற்றுமை – ஐக்கியம் – மிளிர்ந்தது.**

**ரணில் வந்தார். நிலைமை மாறியது. கெடுபிடி நீங்கியது. விளக்கேற்றவும், அஞ்சலி செலுத்தவும், கூடியிருந்து மிதப்புப் பேச்சுப் பேசவும் இருந்த தடை விலக்கப்பட்டது. பிறகு என்ன? நமது தலைவர்களும் தொண்டர்களும் தம் கைவரிசையை காட்டத் தொடங்கி விட்டார்கள்.**

**இன்று தியாகி திலீபன் நினைவு தினத்தை ஒட்டி அரசியல் தலைவர்கள் தங்கள் தொண்டர்களை – மன்னிக்கவும் குண்டர்களை – ஏவி விட்டு விட்டு, சற்றுத் தொலைவில் நல்ல பிள்ளை வேஷம் போட்டபடி நின்றார்கள். தியாகி திலீபனின் உன்னத இலட்சியப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் எல்லாம் அங்கு அரங்கேறின.**

**நல்லூரில் ஈகைச்சுடரின் கௌரவமே காணாமல் போனது. அதுவும் அங்குமிங்கும் ஊசலாடியது. யாருடைய விசுவாசி சுடரேற்றுவது என்பதில் தொடங்கி, யார் மலர் மாலை அணிவிப்பது என்பது வரை எல்லாவற்றிலும் இழுபறி. சர்ச்சை. சண்டித்தனம். அடாவடி. அட்டூழியம். அராஜகம். தர்க்கம். கைகலப்பு – எல்லாமுமே.**

**திலீபன் ஞாபகார்த்தமாக வந்த தூக்குக்காவடியை இறக்குவது வரை நடைபெற்ற குழப்பம் நீடித்தது.**

**ஒரு கட்சியின் தொண்டர்கள் என்ற பெயரில் திலீபனின் உருவப்படம் பொறித்த மேலாடையுடன் ஒரு 'டீம்' அஞ்சலி செய்யும் இடத்தை ஆக்கிரமித்துத் தங்கள் செல்வாக்கை திலீபன் அஞ்சலியில் நிலைநாட்டி உரித்தை(?) நிரூபிக்கத் துடித்தது.**


**'ஐயோ…சாமி…!திலீபனை நீங்கள் அஞ்சலித்தது போதும். நீங்காப் பசியோடும் தீராத் தாகத்தோடும் அவனின் ஆன்மாவை அமைதியாக இருக்க விடுங்கள்…!**

**தொண்டர்களுக்கு அல்ல, அவர்களைக் குண்டர்களாக ஏவி விட்டு விட்டு, அவர்களுக்கு உந்து சக்தியாகத் தூண்டி விட்டு விட்டு, இந்த நிகழ்வில் தமது தரப்பின் அரசியல் செல்வாக்கை நிரூபிக்க நினைக்கும் 'சின்னத் தனமான' கீழ்மைத் தலைவர்களுக்கு இந்த வேண்டுகோள்.**

**புலிகளின் தியாகங்களின் பேரில் நடத்தும் நடிப்பு அரசியலை இத்தோடாவது நிறுத்திக் கொள்ளுங்கள். இனத்துக்கான உங்களின் தியாகங்களை திலீபன் வழியில் அஹிம்சை நெறியில் நிரூபியுங்கள். அதுதான் நீங்கள் அந்தத் தியாகிக்குச் செய்யக் கூடிய உண்மையான அஞ்சலி.**

## இன ஒற்றுமையைப் பாதிக்கின்ற காணி அபகரிப்பு செயற்பாடுகளை உடன் அரசு நிறுத்த வேண்டும்!

### இம்ரான் எம் பி. வேண்டுகோள்



(பைஸல் இஸ்மாயில்)

தற்போது நாட்டில் சிலர் வீரப்பேச்சுக்களை பேசித்திரிந்தாலும் பொருள்களில் விலைகளைக் கட்டுப்படுத்தமுடியாமல் இருப்பதாகவும், பொருள்களுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுவதாகவும், சில பொருள்கள் மாபியா அடிப்படையில் விற்கப்படுகின்றன எனவும், தற்போது வைத்தியசாலைகளில் மருந்து பொருள்கள், ஏனைய வசதிகள் பற்றாக் குறையாகக் காணப்படுவதால் மக்கள் தனியார் வைத்தியசாலையை நோக்கி செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக மக்கள் பாரிய அளவில்கஷ்டப்படுகின்றனர் எனவும் நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது இம்ரான் மக்ரூப் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் –

தற்போது மக்கள் பலதுன்பங்கள், துயரங்கள் அடைந்துள்ள சந்தர்ப்பத் தில் திருகோணமலை மாவட்டத்தில் தோப்பூர் பிரதேசத்திற்குட்பட்ட இக்பால் நகர், உல்லைக்குளம் காணிக ளில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களுடைய இன ஒற்றுமையைப்பாதிக்கின்றவகையில் காணிப்பிரச்சினைகளை உருவாக்கி இன பிரச்சினைகளை உருவாக்க சில நாசக்கார சக்திகள் முயற்சக்கின்றன எனவும் அது உடன் நிறுத்தப்படவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

மேலும், குச்சவெளி பிரதேசத்திற்குரிய சில காணிப் பரப்புகளை கோமரன்கடவள பிரதேசத்துக்கு உள்வாங்குவதாக சொல்லி சில அதிகாரிகள் அளவிட அந்த இடங்களில் வருகின்ற போது மக்களுக்கிடையில் பிரச்சினை உருவாகுவதாகவும் இந்த நாடு சென்று கொண்டிருக்கின்ற இந்த சூழ் நிலையில் இன ஒற்றுமையை பாதிக்கின்ற செயற்பாடுகளை உடன் நிறுத்த வேண்டும் எனவும் அதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

## உயர்தரம் கல்வி கற்கும் மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியத்திலிருந்து புலமைப்பரிசில்!

கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையில் முதற் தடவையிலேயே சித்தியடைந்து க.பொ.த உயர்தரம் கற்பதற்குத் தகுதி பெற்ற மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியத்திலிருந்து புலமைப்பரிசில் பெற்றுக் கொடுக்கும் திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இதற்கமைய புலமைப்பரிசில் பெறுவதற்காக ஒரு கல்வி வலயத்திலிருந்து தகுதியுடைய 30 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். அதன்படி நாடு முழுவதுமுள்ள 99 கல்வி வலயங்களின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் 2 ஆயிரத்து 970 மாணவர்களுக்கு இந்தப் புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது.

புலமைப்பரிசில் வழங்குவதற்காகத் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களுக்கு, அவர்கள் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் வரை மாதாந்தம் 5 ஆயிரம் ரூபா வீதம் ஆகக்கூடியது 24 மாதங்களுக்கு வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வருட க.பொ.த சாதாரணதரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகி க.பொ.த உயர்தர கல்வியாண்டு ஆரம்பிக்கப்பட்டதும் இந்தப் புலமைப்பரிசில் வழங்குவதற்கான விண்ணப்பங்களை கோரும் வகையில் பத்திரிகைகளில் விளம்பரங்கள் வெளியிடப்படும்.

இது தொடர்பாக மாகாண பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்களுக்கு துரிதமாக அறிவிக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளருக்கு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க பணிப்புரை விடுத்துள்ளார்.

## விதைகளை மீளளித்துள்ள விவசாயிகளுக்கு பசுமை இயக்கத்தால் சான்றிதழ்கள் வழங்கல்!






தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் சிறுதானியங்களின் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் இராசதானியம் என்ற திட்டத்தை முன்னெடுத்து வருகிறது. இந்தத் திட்டத்தில் விதைகளைப் பெற்ற விவசாயிகள் அறுவடையின் பின்னர் விதைகளைத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்திடம் மீள வழங்கும் மாண்புறு உழவர் நிகழ்ச்சி சனிக்கிழமை நவக்கிரியில் நடைபெற்றது.

இந்ஜ நிகழ்ச்சியின்போது விதைகளை மீளக்கையளித்த விவசாயிகள் மாண்புறு உழவர் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். தமிழ் மக்களின் பண்டைய உணவுப் பண்பாட்டில் பிரதான இடத்தைப் பெற்றிருந்த சிறுதானியங்கள் தற்போது வழக்கொழிந்து வருகின்றன. சிறுதானியங்கள் வறண்ட நிலத்துக்குப் பொருத்தமான அதிக கவனிப்புத் தேவையில்லாத போசாக்கு நிறைந்த பயிர் களாகும். நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்டிருக்கும் உணவுப்பற்றாக்குறையைக் கருத்திற்கொண்டு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் சிறுதானியங்களை மீள முடிசூட்டுவோம் என்ற கருப்பொருளில் இராசதானியத் திட்டத்தை முன்னெடுத் துள்ளது.

இராசதானியத் திட்டத்தில் விதைகளைப் பெறும் விவசாயிகள் அறுவடையின் பின்னர் பெற்றுக்கொண்ட விதைகளின் இரட்டிப்பு மடங்கு விதைகளைத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்திடம் மீளக் கையளிக்கவேண்டும் என்ற உடன்பாட்டுடன் விதைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டத்தின்கீழ் நூற்றுக்கணக்கான விவசாயிகள் விதைகளைப் பெற்று ஆர்வத்தோடு சிறுதானியச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். இவர்களில் அறுவடையை முடித்த ஒரு தொகுதி விவசாயிகளே தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசனிடம்விதைகளைக்கையளித்துள்ளனர்.

நவக்கிரி மாணிக்கப் பிள்ளையார் கோவில் மண்டபத்தில் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக விவசாய விஞ்ஞானி கலாநிதி எஸ். ஜே. அரசகேசரி கலந்துகொண்டிருந்தார். சிறப்பு விருந்தினர்களாகச் சமூகச் செயற்பாட்டாளர் ம. இரேனியஸ் செல்வின், நீர்ப்பாசனப் பொறியியலாளர் ச. சர்வராஜா ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இந்நிகழ்ச்சியில் குரக்கன் கஞ்சி வழங்கி உபசரிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு




# வங்க தேசத்தில் படகு கவிழ்ந்ததில் 24 பக்தர்கள் பலி!

**மேலும் பலரை காணவில்லை; பெரும் சோகம்..!!**







டாக்கா, செப்.26

வங்கதேசத்தில் கோயிலுக்குப் பயணித்தவர்களின் படகு கவிழ்ந்ததில் 34 பக்தர்கள்பலியாகி உள்ளனர்.

வங்கதேசத்தில் உள்ள பஞ்சகார் மாவட்டத்தில், பூதேஸ்வரி அம்மன் கோயிலுக்கு நேற்று அமாவாசையை முன்னிட்டு ஏராளமான இந்துக்கள், கோயிலில் வழிபாடு செய்யச் சென்றனர். கொரோடா என்ற ஆற்றில் படகு மூலமாக ஏராளமான பக்தர்கள் சென்று கொண்டிருந்த போது, அதிக பாரம் காரணமாக படகு திடீரெனக் கவிழ்ந்தது. இதில் பயணித்தவர்களில், 34 பேர் ஆற்றில் மூழ்கி இறந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

முதல் கிடைத்த தகவல்களின்படி, இறந்தவர்களில் 12 பேர் பெண்கள்,8 பேர் சிறுவர்கள் எனவும், படகில் இருந்த மேலும் பலரை காணவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆற்றில் அதிக வெள்ளம் சென்று கொண்டிருக்கிறது. அதனால் காணாமல் போனவர்கள் தொடர்பில் தவல்கள் எதுவும் இல்லை. இதனால் பலியானோர் எண்ணிக்கை அதிகரிக்கும் எனக் கருதப்படுகிறது.

# போர்க்களமாகின்றது ஈரான்: 50க்கும் அதிகமானோர் பலி!

**ஹிஜாப் சர்ச்சையில் ஆயிரக்கணக்கானோர் கைது**







தெஹ்ரான், செப்.26

ஈரானில் ஹிஜாப் அணிவதைக் கட்டாயமாக்குவதற்கு எதிராக அந்த நாட்டு மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். நாடு முழுவதும் போராட்டம் தீவிரமடைந்து போர்க்களமாக மாறியுள்ளது. பொலிஸாரின் துப்பாக்கிச்சூடு மற்றும் தடியடியில் இதுவரை 50 பேர் உயிரிழந்துள்ளமையுடன் ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 13 ஆம் திகதி ஈரானின் குர்திஸ்தான் மாகாணம், சஹிஸ் நகரை சேர்ந்த மாஷா அமினி (வயது22) என்பவர் தலைநகர் தெஹ்ரானில் உள்ள உறவினரைச் சந்திக்கக் குடும்பத்துடன் சென்றபோது சிறப்புப் படை பொலிஸார், மாஷவை வழிமறித்து அவர் முறையாக ஹிஜாப் அணியவில்லை என்று குற்றம்சாட்டினர். அவரைக் கைது செய்து அழைத்துச் சென்ற பின்னர் பொலிஸ் காவலில் அவர் மிகக் கொடூரமாக தாக்கப்பட்டார். இதில் தலையில் பலத்த காயம் ஏற்பட்ட அவர் கடந்த 16 ஆம் திகதி உயிரிழந்தார்.

மாஷா அமினியின் மரணம் ஈரான் முழுவதும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளதுடன் தலைநகர் தெஹ்ரான் உட்பட நாடு முழுவதும் பெண்கள் திரண்டு தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

தலைநகர் தெஹ்ரானில் நாள்தோறும் இரவில் பெண்கள், பொதுமக்கள் ஒன்றுகூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். 9 ஆவது நாளாக நேற்று இரவும் போராட்டம் நீடித்தது. இரவில் பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபடுவதைத் தடுக்க மின் விநியோகம் நிறுத்தப்பட்டதுடன். தெஹ்ரான் உள்ளிட்ட நகரங்களில் இணையசேவையும் துண்டிக்கப்பட்டிருந்தது. எனினும் எதற்கும் அஞ்சாமல் பொதுமக்கள் குவிந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஈரானின் 80 நகரங்களுக்கு போராட்டம் பரவியுள்ளதுடன் அந்த நகரங்களில் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டுள்ளன. நாடு முழுவதும் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச்சூடு, தடியடி தாக்குதலில் இதுவரை 50 பேர் உயிரிழந்துள்ளனர். இதில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் பெண்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பலர் காயமடைந்துள்ளமையுடன், பொலிஸ் தரப்பிலும்சிலர் உயிரிழந்திருக்கின்றனர் எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன. போராட்டத்தை கட்டுப்படுத்த இதுவரை ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டு உள்ளனர்.

மேலும் ஈரான் நாடு முழுவதும் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளுக்கு விடுமுறை விடப்பட்டிருக்கிறது. முக்கிய நகரங்களில் பொதுமக்கள் வெளியில் நடமாடத் தடை விதிக்கப்பட்டு உள்ளது.

ஹிஜாப் விவகாரத்தால் உயிரிழந்த மாஷா அமினி, குர்து இன பெண் ஆவார். அந்த நாட்டின் மக்கள் தொகையில் பெர்சிய இன மக்களுக்கு அடுத்து குர்து இன மக்கள் பெரும்பான்மையை உள்ளனர். இதுவும் போராட்டம் வலுவடைய முக்கிய காரணமாகக் கூறப்படுகிறது.

வெளிநாடுகளிலும் ஈரான் அரசுக்கு எதிரான போராட்டங்கள் தீவிரமடைந்து வருகின்ற நிலையில், ஐரோப்பிய நாடுகளில் செயல்படும் ஈரான் தூதரகங்களுக்கு முன்பாக பெண்கள் நூதன போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். மக்களுக்கு எதிராக இராணுவத்தை பயன்படுத்தக் கூடாது என்று ஈரான் அரசுக்கு ஐ.நா. சபை எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உக்ரைன் பிராந்தியங்களை இணைக்க ரஷ்யா நடத்தும் வாக்கெடுப்பு ஆரம்பம்!

ரஷ்யா, செப்.26

உக்ரைன் மீது ரஷ்ய இராணுவம் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வரும் நிலையில், உக்ரைனினுடைய சில நகரங்களைரஷ்யாவுடன் இணைத்துக் கொள்வது தொடர்பாக ரஷ்யா வாக்கெடுப்பு நடத்தி வருகிறது. கடந்த பெப்ரவரி மாதம் உக்ரைன்மீது ரஷ்யா போர் தொடுத்த நிலையில், ஆறு மாதங்களையும் தாண்டி போர் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், உக்ரைனின் பல நகரங்கள் மீது ரஷ்ய இராணுவம் நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தியது. குறிப்பாக நீபர் ஆற்றின் கரையில் அமைந்துள்ள ஜபோரிஜியா நகர் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தியது. இதில் குடியிருப்பு கட்டடம் ஒன்று சேதமடைந்தது. அதில் வசித்து வந்தவர்களில் ஒருவர் உயிரிழந்தமையுடன் ஏழு பேர் காயமடைந்தனர். இந்நிலையில், தங்களுடைய கட்டுப்பாட்டில்



உள்ள உக்ரைனின் நகரங்களை தங்கள் நாட்டுடன் இணைத்துக் கொள்ள ரஷ்யா திட்டமிட்டுள்ளது. இது தொடர்பாக அப்பகுதியில் ரஷ்ய அதிகாரிகள் கடந்த மூன்று நாள்களாக வாக்கெடுப்பு நடத்தி வருகின்றனர். தேர்தல் அதிகாரிகள் நடமாடும் வாக்குப் பதிவு மையத்துடன் வீடு வீடாகச் சென்று வாக்கெடுப்பு நடத்துகின்றனர். இவர்களுக்கு பாதுகாப்பாக பொலிஸாரும் செல்கின்றனர். இந்த வாக்கெடுப்பு ஐந்து நாளகளுக்கு நடைபெறும் நிலையில் நாளை 27 ஆம் திகதி அது நிறைவடையவுள்ளது.

உக்ரைனின் பெரும்பகுதியை இணைத்துக் கொள்ள ரஷ்யா நடத்தும் இந்த வாக்கெடுப்புசட்டவிரோதமானது என உக்ரைனும் மேற்கத்திய நாடுகளும் தெரி வித்துள்ளமையுடன், இந்த வாக்கெடுப்பைத் தோல்வியடையச் செய்ய வேண்டும் என ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் உள்ள மக்களுக்கு உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி வேண்டுகோள் விடுத்துள்ளார். ஏற்கெனவே கடந்த 2014 ஆம் ஆண்டு உக்ரைனின் ஒரு பகுதியாக இருந்த கிரீமியாவை ஆக்கிரமித்த ரஷ்யா, பின்னர் வாக்கெடுப்பு நடத்தி தன்னுடன் இணைத்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தமிழகத்தில் பா.ஜ.க.நிர்வாகிகளின் இடங்களில் தொடர் பெற்றோல் குண்டு வீச்சுச் சம்பவங்கள்!

## கோவை, மதுரை, திண்டுக்கல், ஈரோட்டில் 15 பேர் கைது









சென்னை,செப்.26

பா.ஜ.க. நிர்வாகிகளுக்குச் சொந்தமான இடங்களில் பெற்றோல் குண்டுகள் வீசப்பட்ட சம்பவம் தொடர்பாக 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை கோவையில் பா.ஜ.க. மற் றும் ஆர்.எஸ்.எஸ். நிர்வாகிகளுக்குச் சொந்தமான இடங்களில் பெற்றோல் குண்டுகள் வீசப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக மதுரை, திண்டுக்கல், ஈரோடு உள்ளிட்ட மாவட்டங்களிலும் இந்த பெற்றோல் குண்டு வீச்சுச் சம்பவங்கள் தொடர்ந்தன. கோவையில் மட்டும் நகரம் மற்றும் புறநகர் பகுதிகள் என 8 இடங்களில் பெற்றோல் குண்டுகள் வீசப்பட்டன. மொத்தமாக 16 இடங்களில் பெற்றோல் குண்டு வீச்சு சம்பவம் நடைபெற்றது. இதுகுறித்து பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த நிலையில் இந்த சம்பவங்கள் தொடர்பாக, கோவையில் 2 பேர், ஈரோட்டில் 4 பேர், மேலும் மதுரை, திண்டுக்கல் உள்ளிட்ட மாவட்டங்களிலிருந்தும் மொத்தமாக15பேர்கைதுசெய்யப்பட்டுள்ளனர். மேலும் கன்னியாகுமரியில் 2 நபர்களிடம் பொலிஸார் தீவிர விசாரணை மேற் கொண்டு வருகின்றனர். இந்த பெற்றோல் குண்டு வீச்சு சம்பவம் தமிழகத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திய நிலையில், தற்போது வரை இது தொடர்பாக 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் இந்த கைது எண்ணிக்கை உயரும் என்றுபொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# ராஜஸ்தான் காங்கிரஸில் குழப்பம் நீடிப்பு அடுத்த முதல்வரைத் தெரிவதில் இழுபறி!

ஜெய்ப்பூர், செப்.26

ராஜஸ்தான் முதலமைச்சரான அசோக் கெலாட் காங்கிரஸ் கட்சியின் தலைவராக வர விரும்பிய நிலையில் ராஜஸ்தானின் அடுத்த முதல்வர் யார் என்ற குழப்பம் வெடித்துள்ளது.



காங்கிரஸ் கட்சிக்கு புதிய தலைவர் தேர்தல் அடுத்த மாதம் 17 ஆம் திகதி நடைபெறுகிறது. இந்தத் தேர்தலில் காந்தி குடும்பத்தை சேர்ந்த யாரும் போட்டியிட விரும்பவில்லை. இதனால் காங்கிரஸின் மூத்த தலைவர்களில் ஒருவரும், ராஜஸ்தான் முதலமைச்சருமான அசோக் கெலாட் தலைவர் பதவிக்கு போட்டியிட உள்ளார். இவரை எதிர்த்து சசிதரூர் களம் இறங்க உள்ளார்.

எனினும் அசோக் கெலாட், காந்தி குடும்பத்தின் தீவிர விசுவாசி என்பதால் காங்கிரஸ்தலைவராக தேர்வு செய்யப்படுவார் என கூறப்படுகிறது.

இந்நிலையில் கட்சியில் 'ஒருவருக்கு ஒரு பதவி' என்ற அடிப்படையில் அசோக் கெலாட் காங்கிரஸ் தலைவர் தேர்தலில் வெற்றி பெற்றால் ராஜஸ்தான் முதலமைச்சர்பதவியில் இருந்து அவர் விலகுவார் எனக் கூறப்படுகிறது.

இதனை நேற்று அசோக் கெலாட் சூசகமாக கூறினார். இதுதொடர்பாக பேட்டி அளித்த அவர், 40 ஆண்டுகளாக பல்வேறு அரசியல்சாசன பதவிகளை வகித்து விட்டேன். இப்போதுபுதியதலைமுறையினர்வாய்ப்பைப் பெற வேண்டும் என்பதே எனது எண்ணம் என்றார்.

இதனால் மாநிலத்தின் அடுத்த முதலமைச்சராவதற்கு சச்சின் பைலட் தீவிரம் காட்டி வருகிறார். அவருக்கு 20 எம்.எல்.ஏ.க்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர். ஆனால் சச்சின் பைலட் புதிய முதலமைச்சராவதற்கு அசோக் கெலாட் ஆதரவு எம்.எல்.ஏ.க்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக எம்.எல்.ஏ. கோவிந்த் ராம் மேக்வால் கூறுகையில், கடந்த 2020 ஆம் ஆண்டு கட்சிக்கு எதிராக சச்சின் பைலட் கிளர்ச்சி செய்தமையால் ஆட்சிக்குப் பின்னடைவு ஏற்பட்டது. அப்போது சுயேச்சை எம்.எல்.ஏக்கள் தான் உதவினர். இதனால் புதிய முதலமைச்சர் யார் என்பதை அனைத்து தரப்பினரும் ஆலோசித்துத்தான் முடிவு செய்ய முடியும் என்றார்.

அசோக் கெலாட் முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்யக்கூடாது எனவும், அவர் முதலமைச்சராகத் தொடர வேண்டும் எனவும் அவரது ஆதரவு எம்.எல்.ஏ.க்கள் வலியுறுத்தினர். இதனால் நேற்று இரவு தொடங்க இருந்த கட்சி எம்.எல்.ஏ.க்கள் கூட்டம் தாமதமானது.

இந்த கூட்டத்திற்காக இதையும் படியுங்கள்: ரூ.200 கோடி பண மோசடி வழக்கு- நடிகை ஜாக்குலின் பெர்னாண்டசுக்கு ஜாமீன் அசோக் கெலாட், சச்சின் பைலட், மேலிட பார்வையாளர்கள் மல்லிகார்ஜுனா கார்கே, அஜய் மக்கான் ஆகியோர் முதலமைச்சர் இல்லத்தில் காத்திருந்தனர். ஆனால் கூட்டத்திற்கு எம்.எல்.ஏ.க்கள் வர வில்லை. இதனால் அங்கு பரபரப்ப நிலவியது.

சச்சின் பைலட்டுக்கு முதலமைச்ச பதவி வழங்க கூடாது என வலியுறுத்தி அவைத்தலைவரிடம் ராஜினாமா கடிதம் வழங்கப்போவதாக மாநி அமைச்சர் பிரதாப் சிங் கச்சரியவாஸ் கூறினார்.

இதுகுறித்து அவர் கூறுகையில் அடுத்த முதல்-மந்திரி யார்? என்பதை முடிவு செய்வதற்கான ஆலோசனை என்பது அசோக் கெலாட் காங்கிரஸ் தலைவராக தேர்வு செய்யப்பட்ட பிறகு தான் நடைபெறும். கட்சியில் இடம்பெற்றிருக்கும் 102 எம்.எல்.ஏ.க்களில் யார் வேண்டுமானாலும் முதல்-மந்திரியாக வர முடியும். மாநிலத்தின் அடுத்த முதலமைச்சர் யார் என்பதைக் கட்சி தலைவர் சோனியா காந்தி, ராகுல் காந்தி மற்றும் அசோக் கெலாட் ஆகியோரே தீர்மானிப்பார்கள் என்றார். 20 உறுப்பினர்களை கொண்ட ராஜஸ்தான் சட்டசபையில் காங்கிரஸுக்கு 108 உறுப் பினர்கள் உள்ளனர். சுயேச்சை எம்.எல்.ஏ.க்கள் 13 பேர் அசோக் கெலாட் அரசுக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

இவர்களில் 20 எம்.எல்.ஏ.க்கள் மட்டுமே சச்சின் பைலட்டுக்கு ஆதரவு அளிக்கும் நிலையில், புதிய முதலமைச்சர் தேர்வு செய்வதில் ராஜஸ்தான் மாநில காங்கிரஸில் கடும் குழப்பம் நிலவுகிறது. இந்நிலையில் இந்த விவகாரம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவதற்காக அசோக் கெலாட் ஆதரவு எம்.எல்.ஏ.க்கள் 80 பேர் மற்றும் சச்சின் பைலட் ஆதரவு எம்.எல்.ஏ.க்கள் 20 பேரை டெல்லி வருமாறு சோனியா காந்தி அழைப்பு விடுத்துள்ளார்.

# காத்தான்குடி மத்திய கல்லூரியில் பிரதான மண்டபம் திறந்து வைப்பு





(நூருள் ஹுதா உமர்)

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் காத்தான்குடி கல்விக் கோட்டத்திற்குற்பட்ட காத்தான்குடி மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்ட பிரதான ஒன்றுகூடல் மண்டபம் கடந்த வெள்ளியன்று திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை முதல்வர் எம்.ஏ.சீ.எம். சத்தார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் அமைச்சர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் பங்கேற்று கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

நிகழ்வில் மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி எஸ்.எம்.எம்.எஸ். உமர் மௌலானா, காத்தான்குடி பிரதேச கல்விப்பணிப்பாள எம்.எம். கலாவுதீன், காத்தான்குடி நகர சபைதவிசாள எஸ்.எச்.எம்.அஸ்பர் மற்றும் கல்வியதிகாரிகள், முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## இ.கி.மினில் நவராத்திரி வழிபாடு இன்று ஆரம்பம்!





இந்துக்களின் நவராத்திரி விழாவையொட்டி மட்டக்களப்பு கல்லடி இராமகிருஷ்ண மிஷினின் ஆச்சிரமத்தில் இன்று) திங்கட்கிழமை காலை துர்க்கா தேவிக்கான வழிபாடு கொலு பொம்மைகள் வைத்தலுடன் ஆரம்பமாகியது. ஆச்சிரம உதவி மேலாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மஹராஜ் தேவிக்கு ஆராதனை செய்வதை படத்தில் காணலாம். (படங்கள் வி.ரி. சகாதேவராஜா)

## காரைதீவில் கிளவல்லா மீன் வெள்ளம்!

(வி.ரி.சகாாதேவராஜா)

காரைதீவு கடற்கரையில் நேற்று முன்தினம் ஆயிரக்கணக்கான கிளவல்லா மற்றும் வளையா மீன்கள் பிடிபட்டன. கிருஷ்ணபிள்ளை ஜெயவீரா என்ற மீனவருக்குச் சொந்தமான ஆழ் கடல் பாரிய மீன்பிடி படகில் இப்பாரிய பாடு கிட்டியிருக்கின்றது.

ஆழ்கடல் மீன்பிடி படகு உரிமையாளர் ஜெயவீரா கூறுகையில் –

”இன்றைய சமகால பொருளாதார நெருக்கடி மிகுந்த காலகட்டத்தில் இப்படி பெருந்தொகையான மீன்கள் பிடிபட்டிருப்பது மகிழ்ச்சியானது. சுமார் ஆறாயிரம் கிலோ மீன்கள் பிடிபட்டன.

“மொத்த வியாபாரிகள் கிலோ 550 ரூபாவுக்குக் கொள்வனவு செய்தார்கள். கருவாடுபோடுபவர்கள் கிலோ 200 ரூபாவுக்குக் கொள்வனவு செய்தார்கள்.

“அங்கு கூடியிருந்த பொதுமக்களுக்கும் மீன்கள் விநியோகிக்கப்பட்டன.” – என்றார்.

திருவிழா போன்று பொதுமக்களும் கரையில் கூடிக் காணப்பட்டனர்.

கடலுக்குள் இருந்து இந்த மீன்களை கரைக்கு கொண்டு வருவதற்கு எட்டு மணித்தியாலங்கள் எடுத்தன .அதாவது காலை 6 மணி இருந்து பிற்பகல் 2 மணி வரைக்கும் மீனவர்கள் மீன்களைகரைக்குகொண்டுவந்துசேர்த்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



## திருமலையில் 9 நூல்கள் அறிமுகம்






(பைல் இஸ்மாயில்)

மூதூர் – சேனையூர் அனாமிகா பண்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் பேராசிரியர் பாலசுகுமாரின் ஒன்பது நூல்களின் அறிமுக விழா நேற்று மாலை திருகோணமலை மெதடிஸ்த மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் (திருமதி) சரண்யா சுதர்சன் தலைமையில் இடம்பெற்ற இந்நூல் அறிமுக விழாவில் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மூ.கோபாலரத்தினம் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு சிறப்பித்தார்.

இதன்போது சேனையூர் கலம்பகம், கரைகள் கடந்து, Eezha Natiyam Inniyam & Music & Dance of Eazham Tamilians, கறுப்பி, கொடி எழு அன்னப்புரவி, தமிழ் மரபில் சிவாஜி கணேசனின் நடிப்பு, ஈழ நாட்டியம், ஓ தோழனே நந்தினி, நஞ்சுமிழும் காளான்கள் என்ற இந்த 9 நூல்களின் அறிமுகம் இடம்பெற்றது.

இந்த நூல்களின் அறிமுக உரையை ஓய்வுபெற்ற அதிபரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான திருமலை நவம், கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஓய்வுபெற்ற மாகாணப் பணிப்பாளர் திருமதி என்.ஸ்ரீதேவி, திருகோணமலை வலயக் கல்விப் பணிப்பாளர் சி.ஸ்ரீதரன், எழுத்தாளர் கதிர் திருச்செல்வம், எழுத்தாளர் கு.யோகானந்தம், பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் க.அன்பழகன், ஆசிரியர் தி.பவித்திரன், எழுத்தாளர் கொட்டியாரன் சிவசங்கரன் ஆகியோரினால் நிகழ்த்தினர்.

# ஜனநாயகப் போராட்டக்காரர்கள் மீதான அரச அடக்குமுறையை உடன் நிறுத்துக!

## கிண்ணியா நகரசபை உறுப்பினர் எம்.எம். மஹ்தி கோரிக்கை



(ஹுஸ்பர்)

ஜனநாயக ரீதியான மக்கள் போராட்டத்தின் மீது பயன்படுத்தப்படும் அரச எதிர்ப்பு நடவடிக்கையை உடனடியாக நிறுத்த வேண்டும் என கிண்ணியா நகரசபை உறுப்பினர் எம்.எம். மஹ்தி கோரிக்கை விடுத்துள்ளார்.

ஊடகங்களுக்கு வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

பொருள்களின் விலையேற்றம், தட்டுப்பாடு, பஞ்சம், ஊழல் மோசடிகள் போன்ற பல்வேறு பிரச்சினைகளால் பாதிக்கப்படுகின்ற மக்கள் ஜனநாயக ரீதியான போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்தப் போராட்டக் காரர்கள் மீது கண்ணீர்ப்புகை குண்டு வீச்சு, நீர்த் தாரைத் வீச்சு, கைதுகள், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பயன்படுத்தல், அதி உச்ச பாதுகாப்பு வலையைப் பிரகடனம் என பல்வேறுபட்ட எதிர்ப்பு நடவடிக்கையை அரசு மேற்கொள்கின்றது.

அரசின் இவ்வாறான நடவடிக்கைகள் பொது மக்களது கருத்துச் சுதந்திரம், ஒன்று கூடும் உரிமை போன்ற விடயங்களில் இருக்கும் உரிமையை மறுக்கின்ற கண்டிக்கத் தக்க செயற்பாடுகளாகும்.

எனவே இவ்வாறான ஜனநாயகப் போராட்டங்கள் மீது நடத்தப்படும் அரசியல் நோக்கங்கொண்ட மிலேச்சத்தனமான எதிர்ப்பு நடவடக்கைகளை உடனடியாக அரசு நிறுத்த வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# உயர் பாதுகாப்பு வலயங்கள் இலங்கைக்கு புதியவை அல்ல!

## கமல் குணரத்ன கூறுகிறார்




போராட்டங்களை நடத்தி மக்கள் துன்புறுத்தப்பட்டால் பொலிஸார் சட்டத்தை அமுல்படுத்துவார்கள் என பாதுகாப்பு செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.

அத்தோடு, உயர் பாதுகாப்பு வலயங்கள் இலங்கைக்கு நேற்று அறிமுகம் செய்யப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் –

எந்தப் பிரச்சினையும் இல்லை. போராட்டங்கள் நடத்தலாம். கூட்டங்கள் நடத்தலாம். ஆனால் சட்ட முறைப்படி அந்தக் கூட்டங்களுக்கு முன் அனுமதி பெற வேண்டும்.

ஒரு கிராமத்தில்கூட ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்த அந்தந்த பொலிஸ் நிலையங்களில் எழுத்துபூர்வ அனுமதி பெற வேண்டும்.

அன்றாட வாழ்க்கையை துன்பகரமானதாக மாற்றும் விடயங்களை எல்லோரும் விரும்புவதில்லை. எனவே, அதையெல்லாம் பரிசீலித்து பொலிஸார் அந்த அனுமதியை வழங்குகின்றனர்.

திடீர் ஆர்ப்பாட்டங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டிய கடமை பொலிஸாருக்கு உள்ளது. தேவை ஏற்பட்டால் நிலைமையைக் கட்டுப்படுத்த பொலிஸாருக்கு உதவ பாதுகாப்புப் படைகள் தயாராக உள்ளன.

உயர் பாதுகாப்பு வலயங்கள் இலங்கைக்கு நேற்று அறிமுகம் செய்யப்படவில்லை. காலங்காலமாக வரும் சில சூழ்நிலைகளைக் கட்டுப்படுத்தப் பயன்படும் விடயங்கள் இவை.

கடந்த காலங்களில் ஜனாதிபதி செயலகம் சுற்றிவளைக் கப்பட்டது. அரசு அதிகாரிகள் அங்கு தங்கள் பணிகளைச் செய்ய முடியவில்லை. அவ்வாறான இடையூறுகள் ஏற்பட்டால் அவ்வாறான இடங்களை நாம் பாதுகாக்க வேண்டும். முந்தைய நிலை மீண்டும் ஏற்படக்கூடாது. அதனால்தான் கொழும்பின் பெருநகரில் சில இடங்களை மட் டும் உயர் பாதுகாப்பு வலயங் களாக வர்த்தமானி உத்தரவின் மூலம் நியமித்துள்ளோம். – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# வைத்தியர் வீட்டில் 10 கோழி, நாய் ஒன்றை திருடிய 5 மாணவர்கள் மட்டக்களப்பில் கைது!

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசத்திலுள்ள வைத்தியர் ஒருவரின் வீட்டில் 10 கோழி , நாய் என்பற்றை திருடிச்சென்ற உயர் தரத்தில் கல்வி கற்று வரும் 5 பாடசாலை மாணவர்களை கைது செய்து அவர்களது பெற்றோரை வரவழைத்து அவர்களை எச்சரித்து விடுவித்துள்ள சம்பவம் நேற்று (ஞாயிற்றுக் கிழமை) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வைத்தியரின் வீட்டில் சம்பவதினமான வெள்ளிக்கிழமை இரவு உள்நுழைந்த 5 மாணவர்கள் வீட்டின் பின்பகுதியில் அமைந்துள்ள கோழிக் கூட்டில் இருந்த 10 கோழிகளை திருடிக் கொண்டிருந்த போது அங்கு வந்த நாய் ஒன்றையும் திருடிக்கொண்டு தப்பி ஓடியுள்ளனர்.

இது தொடர்பாக வைத்தியர் பொலிஸாருக்கு முறைப்பாடு தெரிவித்ததையடுத்து பொலிஸார் மேற்கொண்டுவந்த விசாரணையில் வைத்தியரின் வீட்டுக் கோழிகளைத் திருடிச் சென்ற பாடசாலை ஒன்றில் உயர்தரம் கற்றுவரும் 5 மாணவர்களை கைது செய்ததையடுத்து வைத்தியர் அவர்களை மன்னித்துவிடுமாறு கோரியதையடுத்து மாணவர்களின் பெற்றோரை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து கைது செய்யப்பட்ட மாண வர்களை எச்சரித்து பிள்ளைகளை கவனிக்குமாறு பெற்றோருக்கு அறிவுரை கூறி விடுவித்துள்ளதாகத் தெரிவித்தனர்.

# தேசிய கடல்சார் வளங்களைபாதுகாக்கும்வார தேசிய வேலைத் திட்டம் யாழில் முன்னெடுப்பு!






சர்வதேச கடற்கரையை சுத்தப்படுத்தல் தினம் மற்றும் தேசிய கடல்சார் வளங்களைப் பாதுகாக்கும் வாரத்தை முன்னிட்டு தேசிய ரீதியிலான வேலைத்திட்டத்தின் யாழ்ப்பாண மாவட்ட நிகழ்வின் பிரதான நிகழ்வு கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை – யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் புங்குடுதீவு பிரதேச வைத்தியசாலைக்கு அண்மையிலுள்ள கடற்கரையில் கடந்த வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட செயலாளர் க.மகேசன் கலந்துகொண்டமையுடன், சிறப்பு விருந்தினராக பி.பி.கே. பார்ட்னசிப் பட்டயக் கணக்காளர் சி.உமாபதி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த செயற்றிட்டத்தின் முக்கிய நிகழ்வான கடற்கரை தூய்மைப்படுத்தல் பணிகள் கடந்த 19 ஆம் திகதி யாழ்.பண்ணை கடற்கரையிலும், 20 ஆம் திகதி நெடுந்தீவு கடற்கரையிலும், 21ஆம் திகதி வல்வெட்டித்துறை நேதாஜி கடற்கரையிலும், 22ஆம் திகதி காரைநகரிலும், 23ஆம் திகதி புங்குடுதீவு கடற்கரையிலும் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள், கடற்படையினர் மற்றும் அரச அலுவலர்களின் பங்களிப்புடன் நடைபெற்றிருந்தது.

மேலும், இந் நிகழ்வுகளுக்கான நிதி அனுசரணையை பி.பி.கே. பார்ட்னசிப் பட்டயக் கணக்காளர் நிறுவனம் வழங்கியிருந்தது. கடற்கரை தூய்மைப்படுத்தல் ஊடாக பொதுமக்கள் மத்தியில் பாரிய விழிப்புணர்வினை ஏற்படுத்துவதுடன் கடல் வளத்தைப் பேணும் வகையிலான கருத்துருவாக்கத்தை மேற்கொள்ளும் வகையிலும் அமைந்திருந்த இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், கடற்படையினர் மற்றும் அரச திணைக்கள அலுவலர்கள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.09.2022இல் வெளியிடப்பெற்றது.